ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 7. டிசம்பர், 1944 நெ. 9

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜு, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயணு,

எடிடர்.

ஸ்ரீமான்

வி. வியன்னு, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.

1. தலையங்கம்—


யுத்தத்திற்கு பின் நீர் பாசன திட்டம் ... 167

குடி மராமத்து பிரச்னை ... 169

2. சென்னை குடி மராமத்து கட்டாய சேவை சட்டம் (I of 1858). 173

3. நம் மாகாணத்தில் கல்வி நிலைமை ... 177

4. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 181




கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal.

VOL. VII] DECEMBER, 1944 [No. 9

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் **1943-44**ம் வருஷத்திய சந்தா தொகையை அனுப்பவில்லை. ஆதலால் அத்தொகையை ஜனவரி மாதம் அனுப்பும்படியாக கேட்டுக் கொள்ளப்படுகிறது. நமது பத்திரிகை பிப்ரவரி மாதம் வி. பி. யில் அவர்களுக்கு அனுப்பப்படும். சந்தாதாரர்கள் அதை தயவு செய்து வாங்கிக் கொள்ளுமாறு கோரப்படுகிறது.

வி. வியன்னு,
பொது காரியதரிசி.

very wrong basis. It ought not to have relied entirely on the Chief Engineer for putting before it schemes for consideration. Naturally enough the Chief Engineer would not feel it his duty to place before any Sub-Committee schemes which do not come straight into the policy that is being pursued by the Government of the day. To point to but one example, there is what is called the Velgode scheme in the Kurnool District that has hung fire for long. We give below an extract from the Statistical Atlas published by the Government of Madras.

> "This project was investigated at length and it has been concluded that it cannot be productive unless the ryots concerned guarantee to pay an average water-rate of Rs. 11 per acre on the wet ayacut and Rs. 5-8-0 on the dry ayacut.".

The Kurnool District is one of the notorious famine districts. Should this policy of 'productive works' be followed in regard to these famine areas? This policy has always been attacked by the people's representatives. Even if the policy of returns should be followed, what at one time was considered necessary as a fair return

because of the prevailing rates of interest may not be so necessary when rates of interest have appreciably fallen. There may be found methods which may lessen the ultimate capital cost. If famine labour were used to do the unskilled part of the work the ultimate capital cost could be reduced. If every householder benefitting by the scheme could be asked to contribute a fixed amount of labour the capital cost could be reduced. If the proceeds of religious endowments could be applied in part for the purpose for a definite number of years the capital cost could be reduced. Some of these matters may require legislation. But why should it be presumed that a popular Government, which is bound to take office after the war, will not shoulder responsibilities of the necessary legislation?

One more example is the Owk Reservoir Project of the same district. This project like many others was suspended on account of the long expected Tungabhadra Project in its earlier and much more extended form. Now that the Tungabhadra Project has shrunk into its present dimensions of serving, at best, mainly the Bellary District with a number of villages in the western taluks of the Kurnool District and villages in two Northern taluks in the Anantapur District, all the schemes suspended in the name of the Tungabhadra project—and they are not small in number—should have been fully examined and reconsidered by the Committee. We would go further and say that the Committee should have taken up, in the interests of the food supply of the province, all irrigation schemes so far advanced and on record and examined them from the standpoint of a popular Government that may take office after the war. That a responsible committee should have recommended for post-war construction eighteen schemes including small schemes like the Gazuladinne Scheme which is expected to serve just about 12,000 acres is really surprising. They should have planned, say for 20 years after the war, and put into the programme as many schemes as might have been feasible after a careful study of all the schemes. There is yet another point in the news which requires clearing up. While the Tungabhadra Project is expected to be taken up even before the war ends the Pennar-Kumudvati Project which we were told awaited merely the consent of the Mysore Government does not appear in the list and a number of other schemes actually under investigation are not mentioned. We take it that the Sub-Committee was not called upon to say anything about the present schemes and that they mentioned the Tungabhadra because they felt it was most in the popular eye at the time. Any way, it will be well for the Government to issue a communique elucidating the position and it will be well for the Sub-Committee to get deeper into the question of irrigation of the province and lay down principles as well as programmes with the clear understanding that we are a deficit province, that we have definite famine areas and

that a real popular Government will guide the destinies of the province after the war.

## The Kudimaramat Question.

The proper functioning of irrigation sources, after they are once constructed, depends upon the care and attention bestowed on their repair and maintenance. Some authority scores or hundred of miles away can never attend to this business as much as the men on the spot. The upkeep of all Irrigation works should really be looked after by bodies of men of the villages for which these works are intended. There is clear evidence that, in olden times, high state dignitaries constructed huge sources of irrigation and the village Panchayats or bodies akin to them looked after their maintenance. But owing to changing historical conditions those arrangements disappeared and after the advent of the British Government the repairs and maintenance of irrigation works has mainly been the work of either the Public Works department or the Revenue department both working under the Board of Revenue. To assist these departments and give them power also to enforce their will, if such a course should become necessary, a number of Acts have come into existence. In this article we propose to deal with but one act and even there primarily with one section. What is called Kudimaramat is based on section 6 of an Act known as the Compulsory Labour Act (I of 1858). We have translated the whole Act for the benefit of our readers elsewhere in this issue together with the Board Standing Order based on it. Section 6 runs as follows:

> "Whenever by local custom any work for the purpose of irrigation or drainage or connected therewith, is usually executed by the joint labour of a village community, any person bound by such custom to contribute labour to such work, who neglects or refuses without reasonable cause to comply with a requisition for such customary aid made to him by the head of the village under orders of the Tahsildar or other superior Revenue Officer, shall be liable to pay a sum equal to twice the value of the labour which he is bound to contribute.
>
> The amount so payable, shall, in case of dispute, be determined, summarily by a village Panchayat assembled by order of the Collector through the Village Munsif according to the rules for assembling such Panchayats prescribed in regulations V and VII of 1816.
>
> Such amount shall be payable on demand; and on non payment, the same may be recovered by the same means by which arrears of land revenue are recoverable.

All sums paid or recovered under this section shall be applicable to the expenses of any works for the purpose of irrigation or drainage executed for the benefit of the village communities to which the defaulters respectively belong."

The fact that the Village Munsif has been mentioned as the authority promulgating the call under this section has not helped to leave the question in the hands of local people best fitted for the purposes of this section. With the change in the policy of the country from the local autonomy of the village into a centralised bureaucracy, the Village Munsif remained no longer the popular leader of the village. He became the direct servant of the crown and had not the old informality with him which made him part of the village community. He had to take orders from superiors, not from his trusted peers in the village. Necessarly he became part and parcel of red tape administration. It thus happened that, except where the ryot was in immediate danger of losing his crop attended to repairs very little care was bestowed upon irrigation sources. As a matter of fact in such urgent cases as the ryot felt called upon to act there was no reference to this legislation. Two instances come to our mind in this connection. In the delta areas of Godavari and Kistna, if the channels of common supply (field-war) are not kept clear the ryots stand to suffer immediate and very striking loss. Therefore, even where there are bitter factions in the village, for this single purpose the contending parties come together and carry out work for themselves by common effort. The difficulty here appears to be that, if there be a few recalcitrants who think they can anyhow get the benefit of the efforts of others, the others are not able to enforce justice. A statutory body could easily do it, if it were acting. The second illustration occurs under the river-dug channels of Pennar in the famine district of Anantapur. The ryot can get nothing out of his land if he does not work hard combinedly to dig up his channels buried up during rains by the onrush of water. Men stand tire above tire and excavate these deep channels year in and year out. In this case also there is no reference whatsoever to this act. A second crop also is raised under these difficult circumstances. The landowner takes not a grain or a blade out of it. It is intended to keep the labourer in work and yet, even after plenty of agitation, the Government is not inclined to waive the water-cess for the second crop. In other places where the disadvantages of not repairing did not appear so patent repairs accumulated so very much that the Board of Revenue had to take special notice and pass orders, more in regard to removal of prickly pear, that the Revenue department or the Public Works Department should first determine whether the whole burden of the work should be placed on the village community or whether the Government should bear the

whole or part of the expenditure. Happily for both the Government and the ryots the insect cochineal has destroyed prickly pear. The issue in regard to it has probably become not a live subject. However, there are other aspects of kudimaramat where the Government cannot escape responsibility for long neglect caused by the inattention of the departments. For instance, we understand that the question of the silt clearance of Oomaipoigai channel in the Papanasam Taluk of the Tanjore district has been under correspondence from 1936 and no understanding has so far been reached. This is really tragic at a time when all existing irrigation facilities should be kept trim, so that the deficiency of food that we suffer from may be made up to the best possible extent. With a view to localise effort and encourage prompt and efficient kudimaramat the Government have allowed co-operative societies to be formed to work at kudimaramat. There again, as may be noticed from the text of the Board standing order, which is also translated elsewhere for the benefit of our roaders, the hold of the departments is kept tight. Moreover, a co-operative society is a voluntary association and there is no guarantee that all concerned enter it. It has thus no legal status binding on the whole community. The Revenue department has to carry part of the work. The Village Panchayat has also come into the picture. That the Public Works Department has sometimes handed over actually carrying out of kudimaramat work on a contract basis to Panchayats is not much. Panchayats at one stage did perform kudimaramat as a part of their duties under Act XV of 1920. A doubt having arisen as to the legality of direct taxation on land the following order about kudimaramat collections was passed by the Government in regard to the kudimaramat charges. "As regards kudimaramat charges or contributions which are levied on the land-owner in lieu of his share of kudimaramat and for which the Panchayat performs direct service by carrying out the work he (the landowner) should have done Government have ordered that these may be sanctioned as fees (payable according to the size of the holding)". Later, however, the Panchayats have had not much to do with kudimaramat. The present Local Boards Act does contemplate the transfer of kudimaramat work to Panchayats. Look at Sec. 65-B which runs as follows:—

> "The Local Government may, subject to such conditions as they may prescribe, transfer to any Panchayat the protection and maintenance of any village irrigation work, the management of turns of Irrigation, the enforcement of Kudimaramat or the regulation of the distribution of water from any irrigation work to the fields depending on it".

If the Government should properly implement this section and hand over Kudimaramat to the Panchayats in the villages

or if more than one Panchayat area is involved, to a special Joint Committee of the different Panchayats the main objective of the Kudimaramat policy stated broadly in the Board standing orders in the words "In general, by that constant care and attention which residents on the spot can alone exercise, to preserve the works of Irrigation in which they and the Government have a common interest from those small injuries which, if unchecked may lead to serious loss and expense" can be well and efficiently be achieved. The overcentralised departmental inefficiency at the ends will then be eliminated, while their advice and guidance will always be sought and utilised for the good of all. The question as to what is 'Customary' which has so often caused unnecessary trouble and delay will automatically solve itself as the Panchayat will be able to look at the question from the point of view of both the ryots concerned and the Government and amicably settle with the Government by proper representation. The handing over of Kudimaramat work to Panchayats will definitely serve to give back to the democratic village community the right to administer one of its most important affairs of life, the keeping in form of the very source of its own food. As part of Planning for efficient cultivation of greatly needed food crops, we do hope the Government will hand over to Panchayats the duties contemplated as long ago as 1935 under Sec. 65-B of the Local Boards Act.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

| Vol. 7 | டிசம்பர், 1944 | No. 9 |
|---|---|---|


நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப் தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபால் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்ப முடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### யுத்தத்திற்கு பின் நீர்பாசன திட்டம்.

யுத்தத்திற்கு பின் செய்யப்படவிருக்கும், நீர்பாசன திட்டங்களைக் குறித்து சென்னை யுத்தத்திற்குபின் நிர்மாண திட்டங்கள் வகுக்க அமைக்கப் பட்ட கமிடியின் நீர்பாசன சப் கமிடி சிபார்சு செய்திருக்கும் ஜாப்தாவை வெறொரு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். இத்திட்டங்கள் பிரதம இஞ்சனீயரால் பரிசீலனை செய்யப்பட்டவை, அல்லது பரிசீலனை செய்யப்பட்டு வருபவை என தெரிவிக்கப்படுகிறது. சப் கமிடியின் சிபார்சுகள் தீர்மான மானவை அல்லது நடந்தே தீரவேண்டியவை அல்ல என்பது எங்களுக்குத் தெரியும். ஆயினும், பிரசுரிக்கப்பட்ட விஷயம் வாஸ்தவமாக இருந்தால் கவர்மெண்டு கவனத்திற்கும் சப் கமிடியின் கவனத்திற்கும் சில விஷயங் களை கொண்டுவர விரும்புகிறோம். தற்சமயம் கிடைத்திருக்கும் தகவல்களி லிருந்து சப் கமிடி சில மிக தப்பான ஆதாரத்தை வைத்து தீர்மானித் திருப்பதாக தோன்றுகிறது. அது தன் ஆலோசனைக்கு திட்டங்கள் சமர்பிக்க பிரதம இஞ்சினீயரையே நம்பியிருக்கக் கூடாது. எந்த பிரதம இஞ்சினீயர் உதவி வகிக்கும் உத்தியோகஸ்தரும் கவர்மெண்டின் அக்கால கொள்கைகளுக்கு விரோதமானதாக இருக்கும்போல் தோன்றும்படி யான சிபார்சுகளைச் செய்வார் என எதிர் பார்க்க முடியாது. உதாரண மாக, வெகு காலமாக பைசல் செய்யப்படாமல் இன்னும் பூர்த்தியாகாத நிலமையிலேயே இருக்கும் கர்னூல் ஜில்லா வெல்கொடே திட்டத்தைக்

குறிப்பிடலாம். கவர்மெண்டு வெளியிடும் கணக்கு புள்ளி விவரம் தரும் அட்லாசிலிருந்து கீழ்கண்டதை பிரசுரிக்கிறோம்.

> " இத்திட்டம் நன்றாக பரிசீலனை செய்யப்பட்டு, அது குடிகள் நஞ்சை அயாகத்தில் ஏகருக்கு சராசரி ரூபாய் 11 ; தண்ணீர் செஸ்ஸும், புஞ்சை அயாகத்தில் சராசரி, ஏகருக்கு ரூ. 5-8-0 ; தண்ணீர் செஸ் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்தாலன்றி, லாபகரமாக நடக்காது."

கர்னூல் ஜில்லா பஞ்சம் பீடிக்கும் ஜில்லாக்களில் பெயர் பெற்ற ஒன்று. இந்த பஞ்சப் பிரதேசங்களில் இம்மாதிரி லாபகரமான திட்டம், அல்லது அப்படி இல்லாத திட்டம் என்ற கொள்கையை கடை பிடிக்க லாமா ? இதை ஜனப் பிரதிநிதிகள் எப்போதும் தாக்கப்பட்டிருக்கிறது. அப்படி அதன் பலன்களை அனுசரித்து திட்டங்கள் நடத்தப்பட்டாலும், ஒவ்வொரு சமயம் இருக்கும் அதிக வட்டி காரணமாக லாபகரமென்று கருதப்பட்ட திட்டம் வேறொரு சமயம் வட்டி குறைவு படுவதால் அவ்வளவு லாபகரமாகவாவது, அவசியமானதாகவாவது இல்லாமல் போக லாம். மூலதன செலவை குறைவு படுத்த சில முறைகளை கண்டு பிடிக்க லாம். பஞ்சத்தினால் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களை மிக பயிற்சி இல்லாத வேலைகளை செய்யும்படி ஏற்பாடு செய்தால், கடைசியாக மூல தனம் செலவு குறைவு படும். இந்த வேலைகளால் பயனடையும் ஒவ்வொரு வீட்டுக்காரரும், இந்த வேலைக்கு ஒரு குறிப்பிட்ட அளவு ஆட்கள் கூலியும் கொடுக்கவேண்டும் என்று ஏற்பட்டால் செலவு தொகை குறைவு படும். சில குறிப்பிட்ட வருஷங்கள் தர்ம ஸ்தாபனங்களின் வருமானத் தின் ஒரு பாகத்தை இந்த வேலைக்கு உபயோகித்தால், செலவு குறையும். இவற்றில் சிலவற்றை செய்ய சட்டம் இயற்ற வேண்டி வரலாம். ஆனால் யுத்தத்திற்குப் பின் கண்டிப்பாக வரப்போகும் பொது ஜனநம்பிக்கை கொண்ட சர்கார் அவசியமான சட்டம் இயற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாது என்று ஏன் நினைக்க வேண்டும் ?

அதே ஜில்லாவில் அவுக் ஏரி திட்டம் மற்றொரு உதாரணம். இன்னும் சில திட்டங்களைப்போல் இத்திட்டமும், ஆதியில் பிரமாதமாக வகுக்கப் பட்ட துங்கபத்ரா திட்டத்தை யுத்தேசித்து ஒதுக்கப்பட்டு இருந்தது. ஆனால் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கும் துங்கபத்ரா திட்டமானது பெல்லாரி ஜில்லாவிற்கும், கர்னூல் ஜில்லாவின் மேற்கு பாகத்திலிருக்கும் பல கிராமங்களுக்கும், அநந்தபூர் ஜில்லா வடக்கே இரண்டு தாலூக்காக் களிலிருக்கும் கிராமங்களுக்கு மாத்திரம் நன்மை தரும்படியானதாக இருப் பதால், கமிடியானது இதுவரையில் துங்கபத்திரா திட்டம் வரப்போவதை யுத்தேசித்து ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் அநேக திட்டங்களையும் நன்றாக பரிசீலனை செய்து ஆலோசிக்கவேண்டும். இன்னும் மாகாண உணவு நிலைமை அபிவிருத்தியை உத்தேசித்து, இந்த கமிடியானது இதுவரையில் சமர்பிக்கப்பட்டிருக்கும் எல்லா நீர்பாசன திட்டங்களையும் யுத்தத்திற்குப்

பின் வரப்போகும் ஜனநாயக சர்கார் கொள்கையை அனுசரித்து பரிசீலனை செய்திருக்கவேண்டும் என்று கூறுவோம். ஒரு பொறுப்புள்ள கமிடியானது, 12,000 ஏகராக்களுக்கே பாயக்கூடியதான காஜிலதின்னே திட்டம் உள்பட 18 திட்டங்களை யுத்தத்திற்குப்பின் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக சிபார்சு செய்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அக் கமிடி யுத்தத்திற்குப்பின் செய்ய ஒரு 20 வருஷ திட்டம் வகுத்து, எல்லா திட்டங்களையும் நன்கு பரிசீலனை செய்த பிறகு எவ்வளவு கூடுமோ அத்தனை திட்டங்களையும் செய்யவேண்டிய வேலை ஜாப்தாவில் சேர்த்திருக்க வேண்டும். பிரசுரிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில் மற்றொரு சந்தேகம் தெளிவுபடவேண்டும். துங்கபத்ரா திட்டம் யுத்தம் முடிவதற்கு முன்பே துவக்கப்படும் என்று ஏற்பாடாகியிருக்கும்போது, மைசூர் சமஸ்தானத்தின் சம்மதத்திற்கு மாத்திரம் காத்துக்கொண்டிருந்ததாக கூறப்பட்ட பெண்ணார்-குமுதவதி திட்டத்தைப்பற்றியாவது, ஆலோசனை செய்யப் பட்டுவரும் இன்னும் இதர அநேக திட்டங்களைப்பற்றியாவது யாதொரு பிரஸ்தாபமும் இல்லை. தற்சமயம் ஆலோசிக்கப்பட்டு வரும் திட்டங்களைக் குறித்து சப் கமிடியின் அபிப்பிராயம் கோரப்படவில்லையென்றும், துங்க பத்ரா திட்டத்தைப்பற்றி அச்சமயம் பேச்சு அதிகமாக யிருந்ததால் அது மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் நம்புகிறோம். எனினும், நிலமையை தெளிவுபடுத்தி கவர்மெண்டு ஒரு அறிக்கை வெளியிடுவது நல்லது. சப் கமிடியும் நம் மாகாணம் குறைவு உற்பத்தி கொண்டது என்றும், அதில் பஞ்ச பிரதேசங்கள் இருக்கின்றன என்றும், யுத்தத்திற்குப் பின் ஜன பிரதிநிதித்வம் கொண்டு சர்கார் அரசாங்கம் நடத்தும் என்றும் மனதில் திடமாக வைத்து, மாகாணத்து நீர்பாசன வசதிகள் அபிவிருத்தி விஷயமாக ஆழ்ந்து ஆலோசித்து கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பது நல்லது.

---

<u>குடி மராமத்து பிரச்னை.</u>

நீர்பாசன வசதிகள் கட்டியபின், அவைகள் சரிவர உபயோகிப் படுவது, அவைகளை சீர்திருத்துவதிலும், பராமரிப்பிலும் இருக்கிறது. 100, அல்லது அதற்குமேல் அப்பால் தூரத்திலிருக்கும் அதிகாரி இவ் வேலையை அந்த ஸ்தலத்திலேயே இருக்கும் ஜனங்கள் கவனிக்கக்கூடியது போல், கவனிக்க சாத்தியப்படாது. இவைகளின் பராமரிப்பு எந்தெந்த ஸ்தலங்களின் உபயோகத்திற்கு இப்பாசன வசதிகள் அமைக்கப் பட்டனவோ, அந்தந்த ஸ்தலங்களில் உள்ள ஜனங்கள்தான் கவனிக்க வேண்டும். பண்டை காலங்களில் அரசாங்கத்து பெரிய உத்தியோகஸ்தர்கள் இப்படிப்பட்ட நீர்பாசன வசதிகளைக் கட்டி, அவைகளை கிராம பஞ்சாயத்துகளும் அவைகளையொத்த இதர ஸ்தாபனங்களும், பராமரிப்பு செய்து வந்ததை ருஜிப்பிக்க போதிய அத்தாட்சி இருக்கிறது. ஆனால் காலமாறுதல்களால் அந்த ஏற்பாடுகள் மறைந்து போயின. பிரிடிஷ் அரசாங்கம் ஏற்

பட்டபின் நீர்பாசன வசதிகளின் மேற்பார்வையை பொது மராமத்து இலாகாவாவது, ரெவினியூ இலாகாவாவது (இரண்டும் ரெவினியூ போர்டுக்கு கீழ்பட்ட இலாகாக்கள்) கவனித்து வந்தது. இந்த இலாகாக்களுக்கு சகாயம் செய்யவும், அவைகளின உத்தரவுகளை சட்டப்படி அமுல் நடத்தவும், பல சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. இந்த கட்டுரையில் அச்சட்டங்களில் ஒன்றைப்பற்றியும், அதுவும் அதிலுள்ள ஒரு செக்ஷனைப்பற்றியும், ஆராய்வோம். குடி மராமத்து என்பது 1358-ம் வருஷத்திய 1-வது நெம்பர் சட்டமாகிய கட்டாய ஊழியச் சேவை சட்டம் (The Compulsory Labour Act) 6-வது செக்ஷன்படி ஏற்படுத்தப் பட்டது. அந்த சட்டம் முழுதும், அதற்கு சம்பந்தப்பட்ட போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ்களுடன் நாம் இவ்விதழில் மொழி பெயர்த்து பிரசுரித்திருக்கிறோம். 6-வது செக்ஷனாவது :—

> அந்தந்த ஸ்தல மாமூல்படி ஒரு நீர்பாசன வசதிக்காக ஏற்பட்ட ஏரி, அல்லது இதர அது சம்பந்தப்பட்ட பாசன வேலை, கிராம சமூகத்தின் கூட்டு உழைப்பினால் செய்யப்பட்டுவருகிறதோ, அந்த மாமூல்படி அந்த வேலையில் பங்கெடுத்துக்கொள்ள கடமைபட்ட ஒருவன், தாசில்தார், அல்லது இதர பெரிய ரெவினியூ அதிகாரியால் கட்டளையிட்டதின் பேரில் கிராம அதிகாரி அவனை அந்த மாமூல்படி சேவை செய்யும்படி கோரப்பட்டு, அப்படி செய்ய தகுந்த காரணமில்லாமல் மறுக்கவோ, அல்லது அசட்டையோ செய்கிறானோ, அவன் அவன் கொடுக்க கடமைப்பட்ட ஊழியத்தின் மதிப்பைப்போல் இரட்டை மடங்கு தொகை கொடுக்க வேண்டும்.
>
> அப்படி கொடுக்க வேண்டியதொகை, அதைக் குறித்து சர்ச்சை ஏற்பட்டால் 1816-ம் வருஷம் ரெகுலேஷன்கள் V & VII படிக்கு கிராம பஞ்சாயத்துகளை கூட்டும் முறையை அனுசரித்து, கலெக்டர் உத்திரவின்பேரில் கிராம முனிசீப்பால் கூட்டப்பட்ட கிராம பஞ்சாயத்தினால் சம்மரியாக தீர்மானிக்கப்படும்.
>
> அத்தொகை கேட்டவுடன் கொடுபடவேண்டும். இல்லாத பக்ஷத்தில் நில வரி பாக்கிக்காக கையாளப்படும் முறைகளை அனுசரித்து இதை வசூல் செய்யலாம்.
>
> இப்படி வசூலிக்கப்பட்ட தொகையெல்லாம், இப்படி கட்டத் தவறியவர்களுடைய கிராமங்களிலிருக்கும் நீர்பாசன வசதிகளின் சீர்திருத்தத்தின் பொருட்டு உபயோகப்படுத்தப்படும்?

இந்த செக்ஷன்படி இந்த ஊழியத்தை கோரவேண்டியது கிராம முனிசீப் என்று குறித்திருப்பதானது, இந்த செக்ஷன்படி செய்யவேண்டியதை தீர்மானிக்க மிக்க தகுதியுடைய கிராம ஜனங்களிடம் ஒப்படைக்க தடையாக இருக்கிறது. கிராம பஞ்சாயத்து மூலம் செய்யப்பட்டது போய் மத்திய அதிகாரத்திற்குட்பட்ட பிரிடிஷ் அரசியல் முறை ஏற்பட்டபின் கிராம முனிசீப் கிராம மக்களின் பிரதிநிதி தலைவன் என்பது போய் விட்டது. அவன் கவர்மெண்டு சேவகன் என்று மாறி, முன்பு இருந்த கிராம மக்களுடைய ஐக்ய பாவம் மறைந்து போயிற்று. அவன் கிராம மக்களின் நம்பிக்கையை பெற்ற தலைவர்களின் சொல்படி நடக்காமல், மேலதிகாரிகளின் உத்தரவிற்கு கீழ்படிந்து நடக்கவேண்டியிருக்கிறது.

ஆகையால் அவனும் 'சிவப்பு நாடா' என்ற அரசாங்கத்தின் ஒரு அம்சமாகிவிட்டான். இதனுல், பயிர் உடனே நாசமாகிவிடும் என்ற ஆபத்து தவிர்க்க முடியாதபடி இருந்தாலொழிய மற்ற சமயங்களில் அவன் இவைகளை சீர்படுத்தாமல் போனுலும், அதை கவனிப்பதில்லை. வாஸ்தவத்தில் மிகவும் முக்கியமாக குடிகள் கவனிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்ட சமயங்களில், இச்சட்டத்தை எதிர்பார்த்து செய்யப்படுவதில்லை. இது சம்பந்தமாக இரண்டு உதாரணங்கள் எங்கள் கவனத்திற்கு வருகின்றன. கோதாவரி, கிருஷ்ணு டெல்டா பிரதேசங்களில் பொது சப்ளை செய்யும் வாய்க்கால்கள் சுத்தமாக வைக்கப்படாவிட்டால், குடிகளுக்கு உடனே பெருத்த நஷ்டம் அடைய நேரிடும். ஆகையால் கிராமத்தில் எப்படிப்பட்ட கக்ஷி பேதங்கள் இருந்தபோதிலும், இந்த ஒரு வேலையின் பொருட்டு அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் கூட்டு முயற்சியால் இதை செய்துவிடுவார்கள். இதில் ஒரு கஷ்டம் என்னவென்ருல், பிறர் வேலை செய்ய தாங்கள் அதன் பலனை அடையலாம் என்ற எண்ணத்துடன் ஒரு சிலர் இருந்தாலும், மற்றவர்கள் நிர்பந்தம் செய்து நியாயமாக நடக்கும்படி செய்ய அதிகாரமில்லை. சட்டப்படி ஒரு ஸ்தாபனம் இருந்து இவ்வேலையை செய்தால் சுலபமாக நிர்பந்தம் செய்ய முடியும். இரண்டாவது உதாரணம், பஞ்சத்தால் பீடிக்கப்படும் அநந்தபூர் ஜில்லாவில் பெண்ணுர் நதியில் தோண்டப்பட்ட வாய்க்கால்களைக் குறித்தது. மழை காலங்களில் மண்ணுல் மூடப்படும் இக்கால்வாய்களை எல்லாரும் ஒன்று சேர்ந்து தோண்டாவிட்டால், குடிகள் சாகுபடி செய்து பயிர் எழுப்பவே முடியாது. குடிகளெல்லாம் வருஷந்தோரும் படிப்படியாக மேல்வரிசைகளாக நின்று இதை ஆழமாக தோண்டுவார்கள். இங்கும் இச் சட்டத்தை எதிர்பார்ப்பது கிடையாது. இத்தனை கஷ்டங்களுடன் இரண்டாம் போகம் பயிரும் செய்யப்படுகிறது. அதனுடைய மாசூலை ஒரு மணி கூட நிலச்சொந்தக்காரர்கள் எடுத்துக் கொள்ளுவது கிடையாது. அது வேலை செய்பவர்களுக்கு வேலை கொடுக்கும் உத்தேசத்துடன் செய்யுப்படுகிறது. இருந்தும், எவ்வளவோ கிளர்ச்சி செய்தும் கவர்மெண்டு அவைகளுக்கு விதிக்கப்படும் இரண்டாம்போக தீர்வையை வஜா செய்ய இணங்கவில்லை.

சீர்படுத்த வேண்டிய அவசியம் அவ்வளவு நிர்பந்தமாக இல்லாத மற்ற இடங்களில், செய்ய வேண்டிய வேலை பாக்கிகள் மிகவும் குவிந்துபோய் விடவே ரெவினியூ போர்டார் அது விஷயமாக பிரத்யேக கவனம் செலுத்தி உத்தரவுகள் பிறபிக்க வேண்டி வந்தது. அதுவும் நாகதாளிகளை அப்புறப் படுத்துவது பற்றி செய்ய வேண்டிய வேலைகளைக் குறித்து, பொது மாமத்து இலாகா அல்லது ரெவினியூ இலாகா அந்த வேலைகளின் முழுச் செலவையும் கிராம மக்களிடமிருந்து வசூல் செய்யவேண்டுமா, அல்லது கவர்மெண்டும் அந்த செலவில் ஒரு பாகத்தையோ, பூராவாகவோ ஏற்றுக் கொள்ளவேண்டுமா என்பதைப்பற்றி தீர்மானிக்க வேண்டி வந்தது. நல்லகாலமாக, நாகதாளிகளை ஒருவித பூச்சி நசிக்கும்படி செய்துவிட்டது. ஆகையால் அதைக் குறித்து விவாதம் செய்ய இப்போது அவ்வளவு

அவசியமில்லை. எனினும், கவர்மெண்டு இலாகாக்களின் அலக்ஷிய காரணமாக ஏற்பட்ட குடி மராமத்து சம்பந்தமான இதர விஷயங்களுக்கு கவர்மெண்டு பொறுப்பாளியாவதிலிருந்து தப்ப முடியாது. தஞ்சை ஜில்லாவில் பாபநாசம் தாலூகா ஊமை பொய்கை வாய்க்காலின் மண் அடைப்பை சீர் செய்யும் விஷயமாக 1936-ம் வருஷத்திலிருந்து கடிதப் போக்குவரத்து நடந்து வருவதாகவும், அது விஷயமாக இது வரையில் ஒரு ஏற்பாடும் ஆகவில்லை என்றும் அறிகிறோம். அதிக ஆகார உற்பத்தி செய்ய முயற்சி செய்யப்படும் இக்காலத்தில் எல்லா நீர்பாசன வசதிகளும் நல்ல நிலமை வைத்துக் கொள்ளப்பட வேண்டியபோது, இந்த தாமதம் மிக்கவும் வருந்தக் கூடியது.

குடி மராமத்து வேலைகளை அந்தந்த ஸ்தலங்களில் துரிதமாகவும், திருப்திகரமாகவும் செய்து முடிக்க குடி மராமத்து வேலைக்கு கூட்டுறவு சொஸைடிகள் ஸ்தாபிக்கப்படுவதை கவர்மெண்டு அனுமதித்திருக்கிறது. இவ்விஷயத்திலும், மொழி பெயர்த்து பிரசுரித்திருக்கும் போர்டு ஸ்டாண்டிங் உத்திரவிலிருந்து இலாகாவின் பிடி கெட்டியாக இருப்பது தெரிய வரும். மேலும் கோவாபரேடிவ் சொஸைடியானது அவரவர்கள் இஷ்டப்பட்டு ஒன்று சேர்ந்து ஸ்தாபிக்கப்படும் ஸ்தாபனம். சம்பந்தப்பட்ட எல்லாரும் அதில் சேருவார்கள் என்று நிச்சயமாக சொல்ல முடியாது. ஆகையால் சமூகம் முழுதையும் கட்டுப்படுத்த அதற்கு சட்டபடி யாதொரு அதிகாரமும் இல்லை. சில வேலைகளை ரெவினியூ இலாகா செய்யவேண்டும். கிராம பஞ்சாயத்திற்கும் பங்குண்டு. சில சமயங்களில் பொது மராமத்து இலாகா குடி மராமத்து வேலையை கண்டிராக்டாக கிராம பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்திருக்கிறது என்பது வேறு விஷயம். 1920 வருஷத்திய 15-வது சட்டப்படி கொஞ்சகாலம் பஞ்சாயத்துகள் குடி மராமத்து வேலைகளை தங்கள் வேலைகளில் ஒன்றாக கவனிக்கும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டன. குடி மராமத்து கட்டணம் நிலத்தின் மீது விதிக்கப்படும் நேர் வரி விதிப்பதுபோல் ஆகுமா என்ற சட்ட பிரச்னை கிளம்பி, குடி மராமத்து கட்டணங்களைக் குறித்து அடியில் கண்ட உத்தரவு பிரபிக்கப்பட்டது. "குடி மராமத்து வேலையில் தன் பங்குக்காக ஒரு நிலச் சொந்தக்காரர்மீது விதிக்கப்படும் கட்டண தொகை, அவருக்கு பதில் அவர் செய்யவேண்டியதை பஞ்சாயத்து செய்து வைப்பதால், கவர்மெண்டு இவைகளை நிலத்தின் அளவிற்கேற்றபடி கட்டணம் 'fees' என்று விதிக்க அனுமதித்து உத்தரவிட்டிருக்கிறார்கள்". ஆனால் பின்னிட்டு பஞ்சாயத்துகள் இவ்வேலையில் ஈடுபட நேரிடவில்லை. இப்போது இருக்கும் ஸ்தல ஸ்தாபன சட்டப்படி குடி மராமத்து வேலையை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைப்பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. 65-B செக்ஷன் சொல்லுவதாவது :—

> "எந்த கிராமத்து நீர்பாசன வசதியின் காப்பாற்றுதல், பராமரிப்பும், நீர்பாசன முறைகளை கையாளுவதும், குடி மராமத்து வேலையை நிர்பந்தப்படுத்தி செய்யும்படி சொல்லுவதும், நீர்பாசன ஸ்தலத்திலிருந்து, நிலங்களுக்கு பாயும் தண்ணீரை விநியோகம் செய்து

> கொடுப்பதும், இந்த வேலைகளை மாகாண கவர்மெண்டு விதிக்கப்பட்ட தகுந்த நிர்பந்தங்களுக்குட்பட்டு, பஞ்சாயத்துகளிடம் மாற்றலாம். போர்டு ஸ்டாண்டிங் உத்தரவில் கண்டிருப்பதுபோல், அ. து. கவர்மெண்டுக்கும், பொது மக்களுக்கும் அக்கரைக்கு லாயக்கான நீர்பாசன நிலங்களை, சிறுது சிறிதாக ஏற்படும் பழுதுகளை தடுத்து அதிக நஷ்டம் ஏற்படாமல் செய்து செய்யக்கூடிய அந்தந்த ஸ்தலத்து ஜனங்களின் இடைவிடாத கண் காணிப்பினாலும், கவனத்தினாலுமே செய்யமுடியும்''.

என்ற கருத்து பலன் தரவேண்டுமானாலும், மேற்சொன்ன செக்ஷனின் கருத்தை அனுசரித்து நடந்தாலும், கவர்மெண்டு குடி மராமத்து பொறுப்பை கிராமங்களில் பஞ்சாயத்துகளிடமாவது, அல்லது பல பஞ்சாயத்துகளின் கூட்டுக் கமிடியிடமாவது ஒப்படைக்க வேண்டும். மத்திய அதிகாரத்திற்குட்பட்ட இலாகாவின் வேலை ஊழல்கள் தவிர்க்கப்படும். தேவையானபோது அந்த இலாகாவின் யோசனை கேழ்க்கப்பட்டு நன்மை தரும்படி அனுசரிக்கப்படும். 'மாமூல்' என்பது என்ன என்பதைக் குறித்து ஏற்படும் அனாவசியமான காலதாமதம் செய்யும் பிரச்னைகள் தாமாகவே மறையும். ஏனெனில் பஞ்சாயத்தானது, குடிகள், கவர்மெண்டு இருதாப்பிற்கும் பக்ஷபாதமற்ற முறையில் இது விஷயமாக ஒரு சமரச ஏற்பாடு செய்ய முடியும். உணவிற்கு மூலகாரணமான நீர்பாசன வசதிகள் காப்பாற்றும் முக்கியமான பொறுப்பு பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கபடுவதால், ஜனயைக உரிமையான தன் பொறுப்பை தானே கவனித்துக்கொள்ளும் உரிமை பஞ்சாயத்துகளுக்கு ஏற்பட்டதாக இருக்கும். மிக்க தேவையாகயிருக்கும் அதிக ஆகார உற்பத்தி திட்டத்தின் முக்கிய அம்சமாக 1935 வருஷமே. ஸ்தல ஸ்தாபன சட்டம் 65-B. செக்ஷன்படி பிரஸ்தாகிக்கப்பட்டபடி கவர்மெண்டு இந்த வேலையை பஞ்சாயத்துகளிடமே ஒப்படைக்கும் என நம்புகிறோம்.

---

# சென்னை குடி மராமத்து கட்டாய சேவை சட்டம் (I of 1858)

---

1. ஒரு ஏரி, ஆறு, கால்வாய், அணைகட்டு, இதுபோன்ற நீர்பாசன வசதிகளை பார்வையிட அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தர், அந்த ஏரி, ஆறு, கால்வாய் இவைகளின் கரை உடனே உடைப்பு ஆகும் என்ற அபாயம் ஏற்படும் என்று கருதினாலும், அல்லது அணைகட்டு, அதுபோன்ற கட்டிடங்களில் உடைப்பு உண்டாகும் என்று கருதினாலும், அதனால் நாசம் விளைவிக்கும் வெள்ளம் பரவும் என்றும் கருதி, உடனே பல ஆட்கள் சேர்ந்து உழைத்து கரையை பலப்படுத்துவதால் தவிர்க்கக்கூடும் என்று அபிப்பிராயப்பட்டாலும், அல்லது உடைப்பு ஏற்பட்டபின், உடனே அநேக ஆட்களைக்கொண்டு வேலை செய்வதால், அதை சீர்படுத்தி, வெள்ளத்தை தடுக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டாலும், அந்த உத்தியோகஸ்தர் அந்த பிரதேசத்தின் அக்கம்பக்கத்திலுள்ள கிராமத்தின் தலைமை

அதிகாரிகளை அந்த கிராமம், அல்லது கிராமங்களிலுள்ள எல்லா வலுவுள்ள ஆண் கூலியாட்களை அழைத்து, அந்த உடைப்பை தடுக்கவோ, அல்லது ஏற்பட்ட உடைப்பை சரிப்படுத்தவோ ஒத்துழைக்கும்படி கோருவதற்கு அவருக்கு சட்டப்படி அதிகார முண்டு.

அந்த உத்தியோகஸ்தர் இல்லாதிருக்கும்பக்ஷத்தில், அவருக்குப் பதில் அந்த தாலூகாவின் தாசில்தார் அப்படி கோர அதிகாரம் உண்டு. அந்த ஸ்தலத்தில் அந்த உத்தியோகஸ்தரும், தாசில்தாரும் இல்லாதபக்ஷத்தில், உடைப்பு அபாயம் ஏற்பட்டிருக்கும், அல்லது ஏற்படவிருக்கும், கிராம அதிகாரி தானே தன் கிராமத்தின் ஆட்களை மேலே சொன்னபடி அழைக்கவும், தேவையானல் அக்கம்பக்க கிராம அதிகாரிகளையும் ஆட்களை அனுப்பி, உடைப்பை தடுப்பதிலோ, உடைப்பு ஏற்பட்டபின் சரிப்படுத்தும் வேலையிலோ ஒத்துழைக்கும்படி கோர, அதிகாரம் உண்டு.

2. மேல் சொன்னபடி கூலியாட்கள் வகுப்பைச் சேர்ந்த எந்த ஆணும், தன் கிராம அதிகாரி வேலை செய்ய அழைத்து, நியாயமான காரணமன்னியில் அப்படி செய்ய மறுத்தாலும் சரி, அசட்டை செய்தாலும் சரி, மாஜிஸ்ட்ரேடினலாவது, அல்லது மாஜிஸ்ட்ரேடின் சாதாரண அதிகாரங்களைப் பெற்ற அதிகாரியினல் தண்டிக்கப்பட்டு, 100 ரூபாய் வரையில் அபராதமும், ஒரு மாதம் வரையில் வெறும் காவலும், அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனைக்கு உட்படுவான்.

3. மேற்படி வேலைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொருவனுக்கும், அதேபோல் வேலைக்கு அந்த சுற்றுப்புறங்களில் கொடுக்கப்படும் அதிகப்படியான கூலி பகல் வேலைக்கு கொடுக்கப்படும். இரவில் வேலை செய்யும்படி கோறப்பட்டால், அதை போல் இரட்டை மடங்கு கூலி கொடுக்கப்படவேண்டும்.

4. கூலியாட்களுக்கு பொது கஜானவிலிருந்து கூலி கொடுக்கவேண்டும். அந்த கூலியாட்கள் தனிப்பட்ட நபருடைய சாதனங்களின் வேலையின்பொருட்டு அமர்த்தப்பட்டால், கஜானவிலிருந்து கொடுக்கப்படும தொகை அந்த நபரிடமிருந்து நிலவரி வசூல் செய்ய ஏற்பட்ட எல்லாவித சட்டப்படி அதிகாரம் மூலம் வசூலிக்கப்படும்.

5. மேற்படி நீர்பாசன அதிகாரி, அல்லது அவர் இல்லாத சமயங்களில், தாசில்தார் இவர்கள் உத்திரவுபடியும், அல்லது மிகவும் நெருக்கடியான சமயங்களில் அந்த அதிகாரியும், தாசில்தாரும் இல்லாமல் தானகவேயும், அந்த கிராமங்களில் வசிப்பவர்களை, மண், கல், மரங்கள், இலைகள், மூங்கில்கள், வைக்கோல், கோணிப்பைகள், இதுபோன்ற ஏரி, ஆறு, கால்வாய் கரைகளில் உடைப்பு ஏற்படாமல் தடுக்கவோ, அல்லது உடைப்பை சரிப்படுத்தவோ அவசியமான சாமான்களை கொடுக்கும்படி கோறவும், எங்கு இருந்தாலும், அச்சாமான்களை கைபற்றவும், எடுத்துப்போகவும், அல்லது அவசியமேற்பட்டால் வெட்டவும், அவைகளுக்கு எழுத்து மூலம் ரசீது கொடுத்து செய்ய சட்டப்படி அதிகாரமுண்டு. அந்த சாமான்களுக்கு அக்கம்பக்கங்களில் கொடுக்கப்படும் விலையில் அதிகப்படியான விலை கொடுக்கப்படும் அப்படி அப்புறப்படுத்துதல், கைபற்றுதல், வெட்டுதல் இவைகளால் எந்த நபருக்காவது நஷ்டம் ஏற்பட்டால், அதற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படும். நஷ்ட ஈடைப்பற்றி அபிப்பிராய பேதம் ஏற்பட்டால, 6-வது செக்ஷன்படி கொடுக்கப்படும் தொகையை நிர்ணயம் செய்வதுபோல நிர்ணயம் செய்யப்படும். இந்த சாமான்கள் உபயோகிக்கப்பட்ட வேலை தனி நபருக்கு சொந்தமானதாக இருந்தால், கஜானவிலிருந்து கொடுக்கப்பட்ட தொகை அவரிடமிருந்து நிலவரி பாக்கி வசூல் செய்வதற்கும் முறைகளை அனுஷ்டித்து வசூல் செய்யப்படும்.

6. நீர்பாசனம், அல்லது நீர்வடிதல் அல்லது அது சம்பந்தமான வேலையானது ஒரு பிரதேசத்து மாமூல்படி கிராம மக்களின் கூட்டு சேவையால்

செய்யப்படவேண்டியிருந்து, அப்படி வேலைக்கு ஆட்கள் கொடுக்க கடமைப்பட்ட ஒருவன், தகுந்த காரணமன்னியில் அந்த மாமூல் சேவை செய்யும்படி தாசில்சார், அல்லது பெரிய ரெவினியூ அதிகாரியால் உத்திரவு செய்யப்பட்ட கிராம அதிகாரியால் கோறப்பட்டு, செய்ய மறுத்தாலும், தவறினாலும் தான் கொடுக்கவேண்டிய ஆட்களின் கூலி கணக்குபோல் இரட்டை மடங்கு தொகை கொடுக்கும்படி நேரிடும்.

அப்படி கொடுக்கப்படவேண்டிய தொகையை குறித்து சர்ச்சை ஏற்பட்டால், 1816ம் வருஷத்திய பஞ்சாயத்துகளை கூட்டும் ரெகுலேஷன் 5, 6 படி கலெக்டரின் உத்திரவின்பேரில் கிராம அதிகாரியால் கூட்டப்பட்ட கிராம பஞ்சாயத்தில், சம்மரியாக நிர்ணயிக்கப்படும்.

அந்த தொகை கேட்டவுடன் கொடுக்கப்படவேண்டும். கொடுக்கத் தவறினால் நிலவரி பாக்கி வசூல் செய்ய அனுஷ்டிக்கும் அதே முறைகளால் வசூலிக்கப் படலாம்.

இந்த செக்ஷன்படி கொடுக்கப்படும், அல்லது வசூல் செய்யப்படும் எல்லா தொகையும், அப்படி தவறியவர்களுடைய கிராமங்களில் பொது மக்கள் நன்மைக்கு நீர்பாசனம், நீர்வடிதல வேலைகள் செய்ய செலவுக்கு உபயோகப்படுத்தப்படும்.

## குடி மராமத்து வேலை.

1858-ம் வருஷத்திய முதல் சட்டம் 6-வது செக்ஷன் கீழ் அதிகாரம் அளித்தபடி கலெக்டர்கள் தங்கள் ஜில்லாக்களிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் குடிகள் நீர்பாசன வசதிகளில் குடி மராமத்து வேலை செய்யப்படுவதை கவனிப்பது அவர்கள் கடமை. இந்த மராமத்து வேலையை குடிகளேதான் செய்யவேண்டும், அல்லது அதன் செலவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக செஸ் கட்டுவதாக அவர்கள் ஒப்புக்கொண்டிருந்தால், அப்போது அவர்கள் செய்ய வேண்டியதில்லை. ஊரில் இலலாத நிலச் சொந்தக்காரர்கள் விஷயத்தில், முக்கியமாக அதிக நிலம் சொந்தமாகவுடையவர்கள் விஷயத்தில், தெளிவாக மாமூல்படி மராமத்து வேலையைப்பற்றி அவர்களுக்காவது அவர்களுடைய ஏஜெண்டுகளுக்காவது கடிதம் மூலம் தெரிவிப்பது விரும்பத்தக்கது. மராமத்து வேலைக்கு வரும்படி அழைக்கும் நோட்டீஸானது தண்டோரா மூலமாக தெரியப்படுத்துவதுடன் கிராம சாவடியிலும் ஒட்டப்படவேண்டும். மாமூல்படி செய்ய்ப்படவேண்டிய வேலைகளைத்தான் செய்யும்படி சொல்லலாம். பணம் கொடுக்கும் வழக்கை அனுசரித்தல்ல. பொதுவாக அநேக ஜில்லாக்களில் செய்யவேண்டியவை யாவன: (1) ஏரிகரை, வாய்க்கால் கரைகளில் ஆடு மாடுகள் நடமாடுவதாலும், மழையினாலும் ஏற்படும் மேடுபள்ளங்களை சரிபடுத்துவது; (2) கரைகளில் நாகதாளி முதலிய பூண்டுகள் முளைக்காமல் தடுப்பது; (3) எக்சிக்யூடிவ் இஞ்சினியர், பாதகம் ஏற்படும் என்று அபிப்பிராயப்பட்டால், ஏரிகரைகளிலிருந்து வளர்ந்திருக்கும் புதர்களை அப்புறப்படுத்துவது; (4) ஏரி முகப்புகளிலிருந்தும் ஆறு, கால்வாய்களிலிருந்தும் வண்டல்களை நீக்கி நிலங்களுக்கு நீர் சுலபமாக பாயும்படி செய்வது; (5) சில்லரை கிளை கால்வாய்களை சீர்படுத்துவது, ஏரிகளிலிருந்து தண்ணீர் பாயும் வாய்க்கால்களில் மண் சேர்ந்து, நிலங்களுக்கு தண்ணீர் பாய்வது தடைபட்டால், அவைகளை சுத்தம் செய்வது; (6) உள்ளூர் மாமூல்படி ஏரிகளுக்கு நீர் பாயும் வாய்க்கால்களை சரிவர வைத்துக்கொள்ளுவது; (7) மழை காலத்தில் எல்லா ஏரிக்கரைகளையும் கவனித்துக்கொள்ளுவது; தண்ணீர் அலைகள் மோதி, உடைப்பு ஏற்படும்போல் தோன்றும் இடங்களில் மண் போட்டு அடைப்பது; கலங்கல்களை திறப்பது, மூடுவது; மேலும் பொதுவாக உடைப்பு ஏற்பட்டு அபாயங்கள் நேரிடாமலிருக்க செய்யவேண்டிய சில்லரை வேலைகளை செய்வது; (8) உடைப்புகளில் வளையம் அணைகட்டு கட்டுவது. அவசியமானால் பயிர் காலங்களில் தற்காலிகமாக ஏரிக்கரைகளை வலுப்படுத்துவது; இப்படி குடிகளும், கவர்மெண்டும் பொதுவாக அக்கரை கொண்ட நீர்பாசன வசதிகளை அந்தந்த பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்களாலேயே செய்யக்கூடியதான ஜாக்கிரதையான கண்காணிப்பை செய்தல், அப்போதைக்

கப்போது இந்த சில்லரை மராமத்து வேலைகள் கவனிக்கப்படாவிட்டால் பின்னிட்டு அதிக நஷ்டத்திற்கும் பண செலவிற்கும் இடமுண்டாகலாம்.

### ஏரி, வாய்க்கால் கரைகளிலிருந்து நாகதாளி முள்ளை அப்புறப்படுத்துதல்.

நீர்பாசன ஆதாரங்களிலிருந்து நாகதாளிகளை அப்புறப்படுத்துவது அவசியம் என்று ஏற்பட்டால், பொது மராமத்து இலாகா அதிகாரிகளும், ரெவினியூ இலாகா அதிகாரிகளும், செய்யவேண்டியிருக்கும் வேலையினுடைய தரத்தை அனுசரித்து, அதன் செலவை குடிகளே ஏற்றுக்கொள்ள வேண்டுமா, அல்லது எல்லா செலவையாவது, கொஞ்சம் பாகத்தையாவது கவர்மெண்டு ஏற்றுக்கொள்ளவேண்டுமா என்பதை தீர்மானிக்கவேண்டும். பூராவாக அப்புறப்படுத்துவதோ, கொஞ்சம் அப்புறப்படுத்துவதோ குடிகள் செய்யவேண்டி வந்தால், காசில்தாராவது அல்லது இதர பெரிய உத்தியோகஸ்தராவது அவர்களை அந்த வேலையைச் செய்யும்படி வற்புறுத்தவேண்டும். அவர்கள் அப்படிச் செய்ய தவறினால், அந்த வேலையை கவர்மெண்டு தன் செலவில் முதலில் செய்து, பிறகு அந்த தொகையையும் இன்னும் அந்த அளவு அபராதத்தையும் சேர்த்து அக்குடிகளிடமிருந்து ரெவினியூ இலாகா வசூல் செய்யவேண்டும். கவர்மெண்டே செய்ய வேண்டியதான அப்புறப்படுத்தும் வேலையும், குடிகள் செய்யத் தவறியதால் கவர்மெண்டு செய்யும் வேலையும், சௌகரியம்போல் பொது மராமத்து இலாகாவாவது, ரெவினியூ இலாகாவாவது செய்யவேண்டும். பொது மராமத்து இலாகாவின் ஆதிக்கத்தின் கீழே இருக்கும் ஸ்தலங்களில் சீர் செய்யும் வேலை ரெவினியூ இலாகா செய்யவேண்டி வந்தால், அதற்குண்டான செலவு தொகையை அது கொடுக்கவேண்டும். இலாகா மாரிபத்தாக வேலை செய்வது நல்லது என்று கருதப்பட்டால், குடிகள் தாங்களே வந்து வேலை செய்வதற்குப் பதில் செலவு தொகைக்கு பண உதவி செய்வதில் ஆக்ஷேபணையில்லை. முதல் பூர்வாங்க வேலைகளை கவர்மெண்டு தன் செலவில் செய்த பின்னர் குடிகளே தங்கள் செலவில் அவ்வேலையை பூர்த்தி செய்யவேண்டும். சாதாரணமாக, நாகதாளி படர்ந்திருக்கும் ஏரிகரைகளையும், வாய்க்கால்களையும் குடிகள் முதலில் அப்புறப்படுத்தி சுத்தம் செய்த பின்னர்தான் கவர்மெண்டு அவைகளுக்கு ரிபேர் வேலை செய்யவாவது, ஆழம் செய்யவாவது செலவு செய்யும்.

### ஏரிகளில் மரம் நடுதல்.

ஏரிகளின் உட்புற ஓரங்களில், முன்னதாக அனுமதி பெற்று பொது ஜனங்களாவது, காட்டு இலாகாவாவது, கொடுக்காப்பள்ளி முதலிய மரங்களையும், மஞ்சம் புல், 'தண்டன் குட்டை' என்ற மாடுகள் தின்னும் புல் வகையையும் பயிர் செய்யலாம். நிலத்தை சொந்தமாக்கக் கூடாது. கவர்மெண்டு பயிர் செய்திருக்கும் மரங்களிலிருந்து ஏதாவது வருமானம் கிடைத்தால், அதை 'காட்டிலாகா' என்ற இனத்தின்கீழ் வரவு வைக்கலாமே தவிற, அந்த பூமியிலிருந்தாவது, மரங்களிலிருந்தாவது வருமானம் அடையக்கூடாது.

### ஏரிக்கரைகளில் பொதுஜன உரிமைகள்.

ஜலமில்லாதிருக்கும் காலங்களில் ஏரிகளின் புல்தரைகள் உள்பட, எல்லா மேய்ப்பு பூமிகளிலும் கிராமத்தார்களுடைய பொது பாத்யதை மிக்க ஜாக்கிரதையாக பாதுகாக்கப்படவேண்டும். தனிப்பட்டவர்களுக்கு மாத்திரம் உரிமை உண்டு என்று எண்ணும்படியாக செய்யப்படும் எந்த நடவடிக்கைக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

# நம் மாகாணத்தில் கல்வி நிலமை.

---

## யுத்தத்திற்குப்பின் சீர்திருத்த திட்டங்கள்.

### சப்-கமிடியின் தீர்மானங்கள்.

யுத்தத்திற்குப்பின் நிர்மாண திட்டம் வகுக்கும் கமிடியின் கல்வி சப்-கமிடி சென்றவாரம் கூடி, கல்வி இலாகா டைரக்டர், சர் ஸ்டாதாம், தயாரித்த சீர்திருத்த திட்டங்களைக் குறித்து ஆலோசித்தது. அவைகளின் விவரம் வருமாறு :—

1-வது முதல் 5-வது வகுப்பு வரையில் எல்லா பிரதேசங்களிலும், எல்லா வகுப்பு ஆண், பெண்களுக்கும், கட்டாய கல்வி போதிக்கப்படவேண்டும் என்றும், தற்போது ஏற்கனவே பள்ளிக்கூடங்கள் இருக்கும் பிரதேசங்களில் தேவையான அளவிற்கு அதிக இடவசதி செய்து கொடுத்துப், உபாத்தியாயர்கள் நியமித்தும் உதவி செய்வதென்றும், தேவையான ஜனத்தொகையுள்ள பள்ளிக்கூடங்களில்லாத பிரதேசங்களில் 5-வது வகுப்புகள் உள்ள புது பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதென்றும், ஒப்புக்கொள்ளப்பட்டது. 5-வது வகுப்பு வரையில் கட்டாய கல்வி திட்டம் அமுல் நடத்தப்பட்டபின், படிப்படியாக, 6, 7, 8 வகுப்புகளுக்கு கட்டாய கல்வி அமுல் நடத்தப்படவேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது.

கட்டாயம் செய்து பள்ளிக்கூடம் போகச் செய்யவேண்டிய பொறுப்பு கல்வி இலாகாவைச் சேர்ந்தது ஸ்தல ஸ்தாபனங்களுடையதல்ல. இத்திட்டத்திற்கு கீழ் படிந்து நடக்காத பெற்றோர்களிடமிருந்து அபராதம் வசூல் செய்யும் வழிகளை தீர்மானிக்க கவர்மெண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென கமிடி தீர்மானம் செய்தது. கட்டாயப்படுத்தி பிள்ளைகளை பள்ளிக்கூடம் போகும்படி செய்ய 'நன்மை' (Welfare) உத்தியோகஸ்தர்கள் நியமிக்கவும் அவர்களுக்கு பிள்ளைகளை கட்டாயப்படுத்தி பள்ளிக்கூடங்களுக்கு அழைத்துவர சட்டப்படி அதிகாரம் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பெற்றோர்களுக்கு சக்தியில்லாமல் பையன்கள் கல்விக்கு பாதகம் ஏற்படும்படி உணவு விஷயமாக சிரமம் ஏற்படும் பிள்ளைகளுக்கு இலவசமாக பகல் போஜனம் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. ப்ரைமரி கல்விக்கு முந்திய கல்வியைக் குறித்து பிரத்யேகமாக யாதொரு நடவடிக்கையும் தேவையில்லை என கருதப்பட்டது. தற்போதிருக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ரூல்களுக்கு உட்பட்டு, நர்சரி பள்ளிக்கூடங்கள் நடத்தலாம் என்பதை கமிடி கவனித்தது. தொழிற்சாலைகள் போன்ற குழைந்த காப்பு ஸ்தலங்கள் உள்ள இடங்களில், தகுந்த போதனுமுறையை அனுசரிக்கவும், மேற்பார்வை செய்யவும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். விஸ்தரிப்பு திட்டம் கடைசியாக வகுக்குமுன் இம்மாகாணத்திலுள்ள தேக சம்பந்தமாகவாவது, மூளை சம்பந்தமாகவாவது ஊனமாக இருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை எடுக்க ஒரு பிரத்யேக விசாரணை நடத்தவேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

### சகண்டரி கல்வி.

இது விஷயமாக பிள்ளைகளின் பள்ளிக்கூடங்களை அபிவிருத்தி செய்யும் முறையில் (1) முன்னேற்றமடைந்த பிரதேசங்களுக்கு செய்யப்படும் எல்லா வசதிகளும் அப்படியில்லாத பிரதேசங்களிலும் செய்யப்படவேண்டும், என்றும், (2) தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அந்தந்த ஸ்தலங்களின் பாஷையை தாய் பாஷையாக கொள்ளாதவர்கள் [(உ-ம்.) முஸ்லிம்கள், கன்னட பிரதேசத்து

சில ஜனங்கள்] இவர்களுடைய நிலைமையை மேன்மைப்படுத்தும் அவசியமும் உணரப்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரத்யேக தேவைகளை கவனித்து பாதுகாக்க பிரத்யேக சிப்பந்திகள் நியமிக்கப்படவேண்டும், அல்லது அவர்கள் ஏற்கனவே இருக்கும் பக்ஷத்தில், அவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்ற யோசனை கூறப்பட்டது.

ப்ரைமரி பள்ளிக்கூடங்களிலிருந்து வரும் பிள்ளைகளை சேர்ப்பதில் தடைகள் ஒன்றும் இருக்கக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

பொதுவாக எல்லா கல்வி சாலைகளிலும், முக்கியமாக சகண்டரி பள்ளிக்கூடங்களில், பிரத்யக்ஷ போதனைமுறை அதிகமாக கையாளப்படவேண்டுமென்றும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சினிமா பிலிம்கள் இருக்கவேண்டுமென்றும், பொது கல்வி ஞானம் பரப்ப, ரேடியோ ப்ராட்காஸ்டிங் இவைகளை தாராளமாக உபயோகப்படுத்தவேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது.

## பெண் கல்வி.

கூட்டு போதனை சாத்தியமில்லாத எல்லா பிரதேசங்களிலும் பெண்களுக்கு பிரத்யேகமாக எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், பெண்களுக்கு சகண்டரி பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை—முக்கியமாக தற்போது மிகக் கொஞ்ச பள்ளிக்கூடங்களேயிருக்கும் சீடட் ஜில்லாக்களிலும், இதர தெலுங்கு ஜில்லாக்களிலும்—அதிகரிக்கவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பெண்களுக்கு ஆர்ட்ஸ் (Arts) காலேஜிகள் அதிகம் வேண்டுமென்றும், பெண்களுக்கு அதிக எல். டி. காலேஜிகள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், இவைகள் இப்போது இவைகள் இல்லாத பிரதேசங்களிலெல்லாம பரவியிருக்கும்படி ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

தற்சமயம் முஸ்லிம்கள், ஷெடியூல் வகுப்பினர்கள், மலை ஜாதியினர்கள், இவர்களுக்கு கொடுக்கப்பட்டுவரும் சலுகைகளும், சகாயங்களும், மேல்கொண்டு அதிகரித்து கொடுக்கப்படவேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது.

## உபாத்தியாயர்களுக்கு பயிற்சி.

பொதுஜன கல்வி சம்பந்தமாக, மேல்தர எலிமெண்டரி பயிற்சி பெற்றுள்ள உபாத்தியாயர்களுக்கு பதில் சகண்டரி பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் நியமிக்கப்படவேண்டும் என்ற லக்ஷியம் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் யுத்தத்திற்குபின் அதிக விஸ்தரிப்பு செய்யவேண்டியது அவசியமாகுமாதலால், மேல்தர எலிமெண்டரி பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் அமர்த்துவது இன்னும் கொஞ்ச காலம் நீடிக்கப்படவேண்டும். மேல்தர எலிமெண்டரி பள்ளிகள், சகண்டரி பள்ளிகள், இவைகளின் எண்ணிக்கை இரட்டிக்கப்படவேண்டும்.

சகண்டரி கல்வி விஷயமாக, ஆண்களின் எல். டி. காலேஜிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டிய அவசியமில்லை என ஒப்புக்கொள்ளப்பட்டது.

## தேக பயிற்சி கல்வி.

கவர்மெண்டுக்கு தேக பயிற்சி கல்வி ஆலோசனையாளர் முழு நேரம் வேலை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு, இருந்துவரவேண்டும் என்றும் ஸ்திரீகள் தேக பயிற்சி கல்வி நிபுணரும் இருந்துவரவேண்டுமென்றும், கடைசியாக ஒவ்வொரு ஜில்லாவிற்கும ஒரு தேக பயிற்சி டைரக்டரும், மாகாணத்தில் ஆறு ஸ்திரீ தேகப் பயிற்சி போதகர்கள் இருக்கவேண்டுமென்றும், அவர்கள் வேலை அதிகரிக்க வேண்டுமென்றும், அதிக சம்பளத்தில் தேக பயிற்சி உபாத்தியாயர்கள் என்ற ஒரு பிரத்தியேக இலாகா ஏற்படுத்தவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

பள்ளிக்கூடங்களுக்கு கவர்மெண்டு அங்கீகாரம் அளிக்குமுன் அவைகளுக்கு விளையாட்டு மைதான வசதிகள் சரிவர செய்யும்படி வற்புறுத்தவேண்டும் என்றும், கிராமாந்திரங்களில் இருக்கும் பள்ளிக்கூடங்களில், கிடைக்கக்கூடிய பூமியில் ஒரு

சிறிய பாகத்தை, தோட்ட வேலை, தேக பயிற்சி விளையாட்டுகள் இவைகளுக்கென்று தனியாக ஒதுக்கப்படவேண்டும் என்ற யோசனை ஒப்புக்கொள்ளப் பட்டது.

## வைத்திய பரிசோதனை.

இதுவரையில் நிர்பந்தமாக செய்யப்படாத காலேஜிகளிலும் வைத்திய பரிசோதனை கட்டாயத்தின்பேரில் செய்யப்படவேண்டும்.

சகண்டரி பள்ளிக்கூடங்களிலும், கிடைக்கக்கூடிய வைத்திய வசதிகளை பயன்படுத்திக்கொண்டு, வைத்திய பரிசோதனையும், அதற்காக முதல் பரிசோதனைக்கு 12 அணா என்றும், பின்னிட்டு, 6 அணா என்றும் கணக்குப்படிக்கு ஒரு கட்டாய கட்டணமும் ஏற்படுத்தவேண்டும். கவர்மெண்டு சகாயம் பெறும் பள்ளிக்கூடங்களில், இச்செலவில் மூன்றிலொரு பங்கு ஒரு பிரத்யேக கட்டணம் மூலமும், இன்னொரு பங்கு பள்ளிக்கூட நிர்வாகிகளும், பாக்கியை கவர்மெண்டு மான்யம் மூலமும் பங்கிட்டுக்கொள்ளவேண்டியது,

எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் இச்செலவு தொகை பூராவும் பொது நிதியிலிருந்தே எடுக்கப்படவேண்டும். யுத்தத்திற்குப்பின் நிர்மாண திட்டத்தின்படி வைத்திய விஸ்தரிப்பு திட்டங்கள் அமுலுக்கு வருமுன், எங்கெங்கு கிடைக்கக் கூடுமோ அங்கு கிராமாந்தர அல்லது இதர டாக்டர்கள் மூலமும், முழு நேரமும் வேலை செய்ய ஏற்பட்ட வைத்திய பரிசோதனை இலாகா சிப்பந்திகள் மூலமும் செய்யப்படவேண்டும். 10 வயதிற்கு மேற்பட்ட பெண்களின் பரிசோதனை முக்கியமாக கவனிக்கப்படவேண்டும்.

நம் மாகாணத்தில் எழுத்தறிவில்லாத வயது வந்தவர்களுக்கு எழுத்தறிவு புகட்ட தற்சமயம் ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனங்களுக்கு இன்னும் அதிக ஆதரவு காட்டவேண்டும். கிராமாந்தர பிரதேசங்களில் பயன்படும்படியான வயது வந்தவர்களுக்கு எழுத்தறிவு போதிப்பசானது. யூனிவர்சிடி கிளை சேவை மூலமும், புத்தகசாலை கொண்ட கல்வி ஸ்தாபனங்கள் மூலமும், ரேடியோ, சினிமா இவைகளின் உதவிகொண்டும் விருத்தி செய்யப்படவேண்டும். மாகாணத்தில் ஒரு புத்தகசாலை சட்டமும் ஏற்படவேண்டும். எழுத்தறிவை நீடித்திருக்கச் செய்ய எல்லா பாஷைகளிலும் இலாகா துண்டு பிரசுரங்கள் வெளியிடப்படவேண்டும்.

## திரும்பி வரப்போகும் ராணுவஸ்தர்கள் பிரச்னை.

எல்லா வகையான ஸ்தாபனங்களிலும் வேலைகளுக்கு, அ.து. உபாத்தியாயர்கள், தேக பயிற்சி ஆசிரியர்கள், தொழிற் கல்வி ஆசிரியர்கள், மேல்தர எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் கைவேலை போதிக்கும் ஆசிரியர்கள், சகண்டரி பள்ளிக்கூடங்கள், இவைகளுக்கெல்லாம் ரூல்கள்படி எல்லா டெக்னிகல் யோக்யதாம்சங்கள் இல்லாவிடினும், மற்றபடி தகுதியுடைய ராணுவ சேவகர்களே நியமிக்கப்படவேண்டும். அவர்களுக்கு ரூல்களுக்குட்பட்டு பிரத்யேக ஆரம்பச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும். மேலும் திரும்பி வரும் ராணுவ சேவகர்களுக்கு கல்வி ஸ்தாபனங்களிலோ, அதைப்போல் இதர ஸ்தாபனங்களிலோ வேலை வேண்டுமென்று விருப்பம் இருந்து, ஆனால் பிரத்தியேக பயிற்சி இல்லாமல் அந்த வேலை கிடைக்கக் கூடியதாக இல்லாவிட்டால், அப்போது அவர்களுக்கு யாதொரு செலவு மன்னியில் இலவசமாக விவசாய, தொழில், டெக்னிகல் அல்லது உபாத்தியாயர்களுக்கு பயிற்சி யளிக்கும் கல்வி ஸ்தானங்களில் பயிற்சி யளிக்க வசதிகள் செய்து கொடுத்து, வேலைக்கு எடுக்கும்போது அவர்களைத்தான் முதலில் நியமிக்க வேண்டும்.

தற்போதிருக்கும் ராணுவ சேவகர்களின் குழந்தைகளுக்கும் அவர்களை அண்டியிருக்கும் இதரர்களுக்கும் கல்வி சலுகைகள், அவர்கள் எல்லாரும் நன்றாக கல்வி கற்று முடியும் வரையில் எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலம் நீடிக்கப்படவேண்டும். கல்வி இலாகா அதிகாரிகள் அபிப்பிராயப்பட்டால், இவையானவர்களுக்கு ஹாஸ்டல்களில் இலவசமாக சாப்பாடும், இடவசதியும்

கொடுக்கப்படவேண்டும். ப்ரைவேட் ஸ்தாபனங்கள் இச்செலவை ஏற்றுக்கொள்ள சக்தியற்றவையாக இருந்தால், அதை கவர்மெண்டே ஏற்றுக்கொள்ளவேண்டும். சாதாரணமாக வீட்டிலிருந்தே கல்வி பயிலக்கூடிய பிள்ளைகளுக்கு இது கொடுக்கப்படமாட்டாது. அப்பிள்ளைகளின் கல்வி முடிந்ததும், அவர்களுக்கும் உத்தியோகங்களில் நியமிக்கும்போது தனி சலுகை காண்பிக்கவேண்டுமென்பதில்லை.

## உபாத்தியாயர்களின் சம்பளம்.

உபாத்தியாயர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். எல்லா கல்வி ஸ்தாபனங்களும் கீழ் எலிமெண்டரி, மேல் எலிமெண்டரி உபாத்தியாயர்களுக்கு குறைந்த பக்ஷம் 20 ரூபாய் சம்பளத்திற்கு குறைவாக கொடுக்கக்கூடாது. இதனால் ஏற்படும் அதிக செலவை ஏற்க சக்தியற்ற நிர்வாகிகளுக்கு கவர்மெண்டு பண சகாயம் செய்யும். ஆனால் நிர்வாகிகளும் தங்கள் கடமையை சாத்தியமான வரையில் செய்யும்படியாக வற்புறுத்தப்பட வேண்டும்.

## நிர்வாகம்.

பள்ளி உபாத்தியாயர்களுக்கும், நிர்வாக இலாகா சிப்பந்திகளுக்கும் குறைந்த பக்ஷ சம்பளம் 100 ரூபாய். காலேஜிகளில் கீழ் உபாத்தியாயர்களுக்கு குறைந்த பக்ஷ சம்பளம் 150. மாகாண சர்வீஸில் 250. மேலும், 400—40—600—50—1,200 செலக்ஷன் கிரேட் 1,250—50—1,500—இந்த முறைப்படி 1-ம் கிளாஸ் கல்வி சர்விஸ் ஏற்பட வேண்டும்.

தற்சமயம் இருக்கும் 1 முதல் 5 வரையில் வகுப்புகள் உள்ள எலிமெண்டரி பள்ளிக்கூடங்களையெல்லாம், கவர்மெண்டு தன் ஆதிக்கத்தின் கீழ் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற யோசனை கமிடி நிராகரித்து விட்டது.

## செலவு நிலமை.

இதனால் ஏற்படும் அதிக செலவை சமாளிக்க தற்சமயம் விதிக்கப்படும் கல்வி செஸ்களுடன், ஒரு கல்வி தலைவரி விதிக்க வேண்டும் என்ற யோசனையை கமிடி ஏற்க மறுத்துவிட்டது. ஆனால் ஒரு நியாயமான மாகாண வரி விதிக்கப்பட வேண்டுமென்பதை ஒப்புக்கொண்டது.

பள்ளிக்கூடங்களுக்கு கட்டாயப் படுத்தி அனுப்புவதை 10 வருஷங்களுக்குள் அமூல் நடத்த வேண்டுமென்றும், இதர யோசனைகளை அமூலுக்குக்கொண்டு வரும் விஷயத்தை பின்னிட்டு யோசித்து தீர்மானிக்கப்பட வேண்டியதாக தள்ளி வைக்கப்பட்டது.

முதல் 5 வருஷ திட்டத்தில் அடங்கினவைகள் வருமாறு: 5-வது வகுப்பு வரையில் கட்டாயத்தின்பேரில் பள்ளிக்கு அனுப்புவது, மத்தியான ஆகாரம், உபாத்தியாயர்கள் அதிக நேரம் வேலை செய்வது உட்பட; கவர்மெண்டு, கவர்மெண்டல்லாத பள்ளி உபாத்தியாயர்களின் சம்பள உயர்வு, கல்வி இலாகா அதிகாரிகள் சம்பள உயர்வு, எல்லா ஸ்தாபனங்களிலும் உடனே டெக்னிகல் கல்வியை அபிவிருத்தி செய்வது இவைகள்தான்

# வர்த்தமானங்களும், குறிப்புகளும்

---

**நீர்பாசன திட்டங்கள்.**

யுத்தத்திற்கு பின் நடத்தும்படி திட்டம் வகுக்குவேண்டி பிரதம இஞ்சினீயர் சமர்ப்பித்த பல ஆலோசனைகளை யுத்தத்திற்கு பின் நிர்மாணதிட்டம் வகுக்கும் கமிடியின் நீர்பாசன சப் கமிடி சென்ற வாரம் ஆஸ்டின் துரையின் தலைமையில் கூடி, பரிசிலனை செய்தது.

அவைகளை அங்கீகரித்து கீழ்கண்ட கிரமப்படி அவைகள் செய்யப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. (பெல்லாரி) துங்கபத்திரா திட்டம்; இதற்கு கவர்னர் ஜனரலின் அனுமதி இப்போது கிடைத்து விட்டது; பெரிய டெல்டா பிரதேசங்களில் நீர்வடிசல் சீர்படுத்துவது; கோயம்பத்தூர் கீழ்பவானி திட்டம், (கடப்பை, நெல்லூர்) கண்டிகோடா ஏரி; மதுரை வைகை ஏரி திட்டம்; பெரிய டெல்டாக்களில் மேட்டு வடிதல்களை அப்புறப்படுத்துவது, வெள்ளத்தை தடுக்க வசதிகள் செய்வது; அனந்தபூர் மேல் பெண்ணார் திட்டம்; திருச்சி புளியம்பாடி திட்டம்; மலையாளம் பாலக்காட்டில் சில ஆறுகளில் அணைகட்டு கட்ட மூன்று திட்டங்கள்; (கிழக்கு தோவரி) கொரிங்காதீவு திட்டம்; (நெல்லூர்) அட்லேரு ஏரி திட்டம்; (நெல்லூர்) நல்லப்பாடு திட்டம்; (குண்டூர்) குண்டல கமமா திட்டம்; (திருச்சி) கட்டளை வாய்க்கால் விஸ்தரிப்பு; (மலையாளம்) மலம் புழா திட்டம்; (குண்டூர்) புலிகொண்டா திட்டம்; (கர்நூல்) காஜிலதின்னே திட்டம்; (கிழக்கு, மேற்கு கோதாவரி, விசாகப்பட்டனம்) போலவரம் ஏரி இவைகள்.

* * *

**நமக்கு எவ்வளவு அரிசி குறைவு.**

கணக்குபடி நம் மாகாணத்தில் அரிசி குறைவு 4 லக்ஷம் டன்கள் தானென்றாலும், புஷ்டி ஆராய்ச்சி நிபுணர்கள் கணக்குபடி, வாஸ்தவமான குறைவு 1,800,000 டன்கள்.

* * *

**போலவரம் நீர்பாசன திட்டம்.**

போலவரம் திட்டத்தின் பயனாக நம் மாகாண அரிசி உற்பத்தியின் அளவில் 6 லக்ஷம் டன்கள் அதிகப்படி கிடைக்கும் என்று வெஸ்டுலேக் அபிப்பிராயப் படுகிறார்.

* * *

**ஒரு புதிய இஞ்சினியரிங் காலேஜ் தேவை.**

இஞ்சினியரிங் காலேஜில் 1945 முதல் 1948 முடிய 600 சிவில் இஞ்சினியர்களும், சில்லரை இஞ்சினியர்களும், 1949 முதல் ஒவ்வொரு வருஷமும் சுமார், 220 சிவில் இஞ்சினியர்களும் லைசென்ஷியேட்சுகளும், 80 மெகானிகல், எலெக்ட்ரிகல் இஞ்சினியர்களும் பயிற்சி பெற்று வெளிவருவார்கள் என்று மேற்படி காலேஜ் பிரின்சுபால் தெரிவித்தார். துரிதமாக பயிற்சி யளிக்கும் வகுப்புகள் துவக்கப்பட்டும், தேவைக்கு வேண்டிய நபர்கள் கிடைப்பது கஷ்டம். மேலும் ஒரு இஞ்சினியரிங் காலேஜாவது ஸ்தாபிப்பதுதான் இதற்கு வழி.

* * *

**பயிரிடக்கூடிய கறம்பு நிலங்கள்.**

பொறுக்கின பிரதேசங்களில் பயிர் செய்யக் கூடிய கறம்பு நிலங்களை கணக்கெடுக்கவும், அவைகள் விவசாயம், தோட்டம் போடுதல், மரங்கள் நடுதல் இவைகளுக்கு ஏற்றவையா என்று தீர்மானிக்க இரண்டு ரிடையர் ஆன விவசாய டெபுடி

டைரக்டர்கள் அல்லது காட்டிலாகா உத்தியோகஸ்தர்களை அவசியமான சிப்பந்திகளுடன் நியமிக்கும்படி விவசாய இலாகா டைரக்டர் கூறின் ஆலோசனையை யுத்தத்திற்தப்பின் நிர்மாண திட்டம் வகுக்கும் கமிடியின் விவசாய சப் கமிடி சமீபத்தில் ப்ரீஸ்ட்லி துரையின் தலைமையில் கூடி ஒப்புக்கொண்டது.

* * *

## ஆந்திர தேசத்தில் விவசாய காலேஜ்.

விவசாய இலாகா டைரக்டர் விவசாய கல்வி விஷயமாக கூறியிருக்கும் யோசனைகளை அமுலுக்குக் கொண்டுவர, இன்னொரு விவசாய காலேஜ் ஸ்தாபிக்க வேண்டியிருக்கும். அநேகமாக அது ஆந்திர ஜில்லாக்களில் ஸ்தாபிககப்படலாம்.

* * *

## கடலைக்காயிலிருந்து கம்பளி.

ஆங்கில விஞ்ஞான நிபுணர்கள் மிருதுவான சிகப்பு வர்ணமுள்ள வழவழப்பான நார் கம்பளியைப்போல் சாயம் போட ஏற்றது கண்டுபிடித்திருக்கிறார்கள். கடலைக்காயின் ஒரு வகையான பீநட் (Peanut) என்பதிலிருந்து எடுக்கப்படும் இந்த நாருக்கு ஆர்டில் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. செய்கை கம்பளியானது தாவர ப்ரோடின் வஸ்துவிலிருந்து ஒரு பிரத்யேக முறையால் எடுக்கப்படுகிறது. 100 சத விகிதம் கம்பளியால் செய்த துணிகள் மாதிரியே 50 சத விகிதம் இந்த நார் கலந்த துணிகள் இருக்கின்றன. இலேசான கம்பளி துணிகள் இதனால் செய்யலாம். கடலைக்காயிலுள்ள எண்ணையில் 50 சத விகிதம் மனிதர்களுடைய உணவிற்கு உபயோகப்படுகிறது. மீதி ஆர்டில் துணி தயார் செய்வதற்காக ப்ரோடீன் எடுக்கப்பட்டபின் கால்நடைகளுக்கு தீனியாக உபயோகிக்கலாம்.

# மதருஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனு பஜார் ரோட், மதர்ராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:-

இப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

எஸ். ராஜரத்தினம்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதருஸ் கார்பரேஷனுக்கும், மதருஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்.
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. விய்யன்னு, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.
மதருஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதராஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகாப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,60,00,000.** |
| லைப்பண்டு | — | **16,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்

**வி. வெங்கடாசலம்,** எம். ஏ., பி. எல்.,

காரியதரிசி.